25

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௪.	1916-ம் ஆு பிப்ரவரி மீ	இதழ் ௨.

இலௌகிகப் பகுதி.

பிராஞ்சிந்தியா குவர்னேர் அவர்கள் இந்துக்களுக்குத் தெரிவிப்பது.

புதுவை, 1916-ம் ஆு பெவுரியே மீ 7-ம் உ.

இந்துக்களே,

குடியரசுத்தலைவர் உங்கள் தேசாபிமானத்தை நன்குணர்ந்து பிராஞ்சுப் பட்டாளத்தில் அமரச் சம்மதப்படுபவர்களைச் சேகரித்து அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பதை உங்கள் ஊர்களிலும் கிராமங்களிலும் இன்னும் நாட்டுப்புறங்களிலும் எங்கும் தமிழில் விளம்பரப் பத்திரிகைகள் ஒட்டியிருப்பதை நீங்கள் ஏற்கனவே படித்துப் பார்த்துத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். கடந்த டிசம்பர் மீ 30-ம் உ தெக்றேயினால், சாதி முறைகளைக் கைவிடாத இந்துக்களும் (சித்தொய்யேன் பிரான்சே) பிராஞ்சுக் குடிகளைப்போல் சண்டைக்காலத்தில் தாங்களும் படையில் சேர்ந்துகொள்ளும்படி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்போது நடக்கும் கொடிய சண்டையில் நமது அடுத்த இராச்சிய வாசிகளும் நமது நண்பர்களுமான இங்கிலீஷ் பிரசைகளும்

ஐரோப்பாவிலுள்ள அநேக பெருத்த இராச்சியங்களும் நம்மோடு சேர்ந்து ஜெர்மனிபேரிலும் அதின் ஐக்கிய தேசங்கள்பேரிலும் எதிர்த்துப் போர் புரிந்து வருவதை உங்களில் அறியாதவர்கள் ஒருவருமில்லை. அதை யான் நன்ருய் உணர்ந்திருக்கிறேன். தகாதவிதமாயும் துஷ்டத்தனமாயும் சண்டை செய்ய வெகு காலமாக முன் சாக்கிரதையுடன் இருந்து இராச்சிய சகல உடன்படிக்கைகளையும் அவமதித்து இராசாங்கத்தார் நடந்துகொள்ளவேண்டிய ஒப்பந்தங்களையும் மறுத்துப் போருக்கு வந்த ஒரு இராச்சியத்தின் கொடுமைக்குப் பலியாயிருக்கும் பிராஞ்சு தேசமானது, இராசாங்கங்களிலுள்ள முறைமைச் சட்டங்களை அனுசரிப்பதில் முற்றும் நம்பிக்கைவைத்து, தேசம் அமரிக்கையாக இருக்கவேண்டிய விஷயத்தில் தான் கவனித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், கொடிய மிருகச் செய்கையுடனும் அயோக்கியத்தனமாயும் தன்மீது வந்த எதிரியை எதிர்த்து அடித்துத் துரத்துகிறதற்கு வேண்டிய தனது படைகளையெல்லாம் யுத்தகளத்திற்கு அனுப்பவேண்டியதிருந்தது.

ஜெர்மனியோ தான் திடீரென்று சண்டைக்கு வந்ததினுல் தான் வெகு சுலபமாயும் வெகு சீக்கிரத்திலும் ஜயத்தை யடையலாமென்று எண்ணிக்கொண்டிருந்த எண்ணத்துக்கு முழுது மாற்றமாக நமது படைகளோ எதிரிகளை வீர கெம்பீரத்துடன் எதிர்த்துத் தாக்கி இரத்த வெள்ளம் ஓடச்செய்து அவர்களை எங்கும் சிதற அடித்துத் துரத்தினது நமது படைகளின் தீரவீர தத்துவத்தினுல்தான். நீங்கள் அதையும் அறிந்திருக்கிறீர்கள். எதிரிகளோ கலங்கிக் கொஞ்சம் கொஞ்சமாகப் பூமிகளை இழந்து வருகிருர்கள். ஆனுல் அவர்கள் சண்டை ஆரம்பத்தில் நமது தேசத்தில் போதுமான முக்கியமுள்ள சில இடங்களைப் பற்றிக்கொண்டார்கள். அவர்கள் செய்யும் கொள்ளைகள், பயங்கரமான கொடுமைகள் ஒழியும்படிக்குக் கூடிய விரைவில் அவர்களைத் தாங்கள் பிடித்திருக்கும் இடங்களிலிருந்து துரத்தி அவர்கள் இராச்சியத்தில் பழையபடி ஓடிப்போகச்செய்து பிறகு அவர்களைச் சமாதானக் கேள்விக்கு உள்ளாக்கி, பிராஞ்சு தேசத்திற்கும் நமது ஐக்கிய தேசங்களுக்கும் எதிரிகள் செய்திருக்கின்ற தீமைகளுக்கும் சேதங்களுக்கும் நஷ்டபரிகாரங்கள் செய்யும்படிக்கு அவர்களைக் கட்டாயப்படுத்துவதும் எந்த விதத்திலும் முக்கியமானது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியது யாதெனில், நமது பிராஞ்சு தேசமானது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மாத்திரமல்ல தான் போர்புரிகிறது. இன்னமும் ஜெர்

மணியானது சகல நியாயங்களையும் சகல உடன்படிக்கைகளையும் கொஞ்சமேனும் நாணமில்லாமல் உதறிவிட்டு, பெல்ஜியம், செர்பியா, லக்ஸம்பர்க் இவைகளின் பூமிகளைத் தனக்குள் ஐக்கியப்படுத்தி அவற்றிலுள்ள பிரஜைகளையும் கொடுமையான அடிமைத்தனத்தில் தற்சமயம் வைத்திருக்கின்றது. அந்தத் தேச வாசிகளையும் மீட்கிறதற்குத்தான் பிராஞ்சு தேசமானது அந்த ஜெர்மனியோடு இன்னமும் போர்புரிகிறது. இந்தப் பெருத்த முடிவை நாம் அடைவதற்குச் சண்டை கட்டாயம் இன்னம் மிக நீண்டு நடைபெறும். ஏனெனில், நமது சத்துருக்கள் அஞ்சத்தக்க பலத்திலேயே இன்னம் இருக்கிறார்கள். ஏராளமான சாதனங்களும் அவர்களுக் கிருக்கின்றன.

ஆனதால் நமது பிராஞ்சு தேசமும் நமது நேச இராச்சியங்களும் இன்னம் மிகுதியான சேனைகளைச் சேகரித்துக் கூட்டவேண்டிய திருக்கிறது. ஏனெனில், யுத்தகளத்தில் ஏற்கனவே இறந்தவர்களுக்கும் இனி மரிக்கக்கூடியவர்களுக்கும் ஈடு செய்வதற்கே பெருத்த படைகள் கிளம்பவேண்டி யிருக்கின்றன.

இங்கிலீஷ் அரசாங்கத்தில் யாவரும் படையில் அமர்ந்து கடமையாக வேலை பார்த்துவர நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. ஆனதால் அந்த அரசாங்கத்தார் தமது சொந்தக் குடியேற்ற நாடுகளின் உதவியையும் கேட்டிருக்கின்றனர். இந்தியாவானது சீக்கியர், கூர்க்கர், இராஜபுத்ரர், பட்டானியர், பர்மானியர் இன்னம் அநேக நாடுகளிலுள்ள படைகளை ஏராளமாக அனுப்பியிருக்கிறது. ஆனபடியால் அந்தவிதமாகப் பிராஞ்சு தேசமானது தனது கொலோனிகளில் பிறந்த பிள்ளைகளும் இந்த ஆபத்தான சந்தர்ப்பத்தில் தனக்கு உதவியாக வந்து, மனிதர் மிக்க அநாகரிகர்களாயிருந்த காலத்தில் உண்டாயிருந்த கொடுமைத்தனத்திலும் மிகக் கொடுமை செய்துவரும் இந்த ஜெர்மனியால் உலகம் முழுதும் பயமுறுத்தப்பட்டிருப்பதால் தன்னை அந்தப் பயத்தினின்று நீக்கிக் காப்பாற்றுவது மிகப் பெருமையா யிருக்குமென்று தானும் இவ்விதம் எண்ணினது.

ஆனதால் இப்போது உங்கள் ஒத்தாசை உதவியை என்னத்திற்கு விரும்புகிறார்கள் என்று நீங்கள் கண்டுபிடியுங்கள். உங்கள் தாய் நாடு உங்களுக்குச் சகல நன்மைகளும் செய்திருக்கிறது. உங்கள்பேரில் எப்போதும் நற்கவனம் வைத்திருக்கிறது. உங்களுக்கு எங்கும் படிப்பை விருத்திபண்ணியிருக்கிறது. இன்னமும் தனது சொந்தப் பிள்ளைகளுக்கு உண்டான வாக்குச் சுதந்தரம் இராச்சிய பரிபாலன உரிமைகள்

உங்களுக்கும் கொடுத்திருக்கிறது. இப்படிப்பட்ட நலங்களை எல்லாம் உங்களுக்குச் செய்திருக்கும் உங்கள் தாய் நாட்டைக் காப்பாற்ற நீங்கள் யாவர்களும் படையில் அமருகிறதற்குப் பெருங் கூட்டமாக வருவீர்களென்று எனக்கு முழு நம்பிக்கையிருக்கிறது. இவ்வித சகல நன்மைகளையும் அடையப் பாத்திரவான்களாகிற விஷயத்தில் நீங்கள் சந்துஷ்டியடையுங்கள். உங்களுக்குச் சகல சுதந்த்ரங்களும் ஏற்பட்டிருக்கிறபோது அதற்கு ஈடாக உண்டாகும் கடமைகளையும் நீங்கள் செய்யத் தெரிந்தவர்களென்று நீங்கள் நல்ல மனதுடன் எண்பியுங்கள்.

மேலும் இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் செய்யவேண்டிய கடமைகளை இன்னதென்று நீங்கள் தெரிந்துகொள்ளாமலிருந்தால், உங்கள் தாய்த்தேசம் உங்கள் அறியாமைமட்டில் மிக ஆச்சரியப்பட இடமிருக்குமென்று உங்களுக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாய்த்தேசமானது இந்தச் சமயம் பெரிய ஆபத்துக்குள்ளாகி, தனது நிலையையே ஸ்திரமாக்கிக்கொள்ளுகிறதற்கும், ஜெர்மனியர் மட்டிச்செய்கைகளுக்கும் அன்னவர்களோடு பிறந்த துர்க்குணங்களுக்கும் முற்று மாறாக நமது நாகரிகத்தையே நிலைப்பிக்கிறதற்கும் போர்செய்து வருகிற இந்த நேரத்தில், தனது பிள்ளைகள் யாவரும் தன்னுடன் கலந்து தனது பக்கத்திலிருந்து சண்டை செய்யவும், ஜயபேரிகை முழக்கவும் நமது தாய்த்தேசம் பார்க்கவேண்டியது. பிராஞ்சுக்கொடி ஆளுகையிலிருக்கப்பட்ட பல தாட்டிகமான ஒவ்வொரு நல்மனதுடைய மனிதனும் இந்தச் சந்தர்ப்பத்தில் தான் ஆவசிகம் செலுத்தவேண்டிய கடமைகளைச் செய்து காட்டாவிட்டால், உங்களைச் சரியான சித்தொய்யேன்கள் அல்ல என்று பிராஞ்சு தேசம் பாவிப்பதுடன், நீங்கள் இந்த ஆபத்துக் காலத்தில் தனக்கு உதவிசெய்ய வராமலிருந்துவிட்டதையும் மறந்தேபோகாது. ஆகையால் அவ்விதமான ஒரு குறை சொல்லாதவிதமாகவும், முக்கியமாய் அப்பேர்ப்பட்ட ஒரு உத்தரவாதம் உங்கள்பேரில் ஏற்படாத விதமாகவும் நீங்கள் நடந்துகொள்ளுங்கள். தீர வீரமுள்ளதும் பெருமையுள்ளதுமான நமது பிராஞ்சு சைன்னியத்தில் நீங்கள் அமருகிறதற்கு இப்போது யாதொரு தடையுங் கிடையாது. நீங்கள் கும்பல் கும்பலாகப் போய்ப் படையில் அமர்ந்து வேலைசெய்யுங்கள். அங்குப் பிராஞ்சு தேசப் பிள்ளைகளைப்போல உங்களையும் அவ்விடம் வரவழைத்து ஏற்றுக்கொள்ளுவார்கள். தேசத்தை மீட்கப் பாடுபட்டு, ஜெர்மனியின் கையில் அகப்பட்டுக் கலங்கித் துன்பப்படும் நிர்ப்பாக்கியர்களை மீட்டு, கிழவர்களென்றும், பெண்பிள்ளைகளென்றும், பிள்ளைகள் குழந்தைகளென்றும், அற்புத சித்திர வேலையுள்ள தேவாலயங்களென்றும் கொஞ்சமேனும் எண்ணிப்

பாராத இத்துஷ்ட ஜெர்மனியருக்குப் பலியான அநேக மாசற்றவர்களுக்காகப் பதிலுக்குப் பதில் அவர்களைப் பழிவாங்கினால் உங்களுக்கு மிகக் கீர்த்தி பின்னிட்டு உண்டாகும்.

நீங்கள் படையில் அமர, பிராஞ்சு சைன்னியங்களுக்குள்ள ஏற்பாடுகளும் ஒழுங்குகளுமே உங்களுக்கும் உரியவையாகும். உங்கள் வழக்கத்துக்கு விரோதமில்லாத சாப்பாடு உங்களுக்குக் கொடுக்கப்படும். உங்களுக்கு உரித்தான உடுப்புகள் விடுதிகள் கொடுக்கப்படும். யுத்தகளத்தில் கைதேர்ந்த உங்கள் எஜமான்மார்கள் பேதமில்லாமலும் பட்சமாயும் உங்களைப் பார்த்து நடத்துவார்கள்.

சீமையிலுள்ள பிராஞ்சுக்காரர்கள் பெற்றுவரும் சம்பளமே உங்களுக்கும் கொடுக்கப்படும். சண்டை செய்கிறபோது கடுங்காயம் நீங்கள் பட்டால் அதற்கு வெகுமதிகளும் பிஞ்சினும் உங்களுக்குக் கொடுக்கப்படும். உங்களுக்குப் போர்க்களத்தில் மரணம் நேர்ந்தால் உங்கள் மனைவிமார்கட்கு, பிஞ்சினுக்குச் சகல சுதந்தரமும் இருக்கும். படையில் அமருவதற்கு நீங்கள் கட்டவேண்டிய ஆதாவுகள் யாவும் இன்னதென்று விளம்பரங்களில் விபரமாய்க் கண்டெழுதியிருக்கிறது. அந்த விளம்பரங்கள் எங்கும் ஒட்டியிருப்பதால், வாசித்து நீங்கள் கட்டவேண்டிய ஆதாவுகள் இன்னின்னவையென்று அறிந்துகொண்டிருக்கக்கூடும். நீங்கள் சண்டையில் அமருகிறதற்கு நீங்கள் மேர்மார்களிடம் போய் உங்கள் பெயரை எழுதிவைக்கவேண்டும். படையில் அமருவதற்கு உடன்படிக்கை செய்துகொள்ளுகிறவர்கள் மிக அதிகமாயிருப்பார்களென்று நான் முழுதும் நம்பியிருக்கிறேன். நான் அவ்விதம் கோருவது இந்துப் பிராஞ்சுவின் பெயர் பிரபல்லியப்படுவதற்காகத்தான்.

தாய்த் தேசமானது உங்களைச் சித்தொய்யேனாக ஆக்கினது நியாயமானதென்றும் அதன் கடமைகள் இன்னின்னதென்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்களென்றும், உங்களுக்குக் கொடுபட்டிருக்கும் சகல சுதந்தரங்களுக்குக் கைம்மாறாகச் சண்டைக்கு ஆகவேண்டிய கடமைகளைச் செய்யச் சித்தமாயிருக்கிறீர்களென்றும் யாவரும் கண்டுணரும்படி நீங்கள் நடந்து காண்பியுங்கள். பிராஞ்சு தேசமானது தனக்கு இந்தச் சமயத்தில் உதவிசெய்ய வந்தவர்களை மறக்கவே மறக்காது.

இந்துக்களே, நீங்கள் யாவர்களும் எனது வார்த்தைகளைச் சரிவரக் கண்டுபிடித்து உணர்ந்தீர்களென்றும், எனது வார்த்தைகள் உங்கள் மனதில் புக அதைப் பின்சென்று நடப்பீர்களென்றும் நான் உறுதியான எண்ணத்துடன் உங்கள் முன் வந்து நீங்கள் யாவர்களும் என்

னுடன் கலந்து "பிரான்சு தேசம் வாழ்க" என்று மங்கள வாக்குச் சொரியவும் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"பிரான்சு தேசம் வாழ்க!"

அ. மர்த்தினே.

தமிழில் மொழிபெயர்த்ததற்காக:
அ. விஸ்வநாதன்.
செக்ரெத்தாரியா ஜெனெரால் கொம்மி,
அத்மினீஸ்திராசியம் எந்தெர்பிரேத்.

தமிழ் நாவல்கள்.

ரமணி.

(ஓர் காதற் கதை.)

கதாசிரியர்:— சு. அ. சுப்பராயப்பிள்ளை.

கதைச் சுருக்கம்.

ஜனார்த்தனன் என்பான் சிற்றிளம்பருவத்திலேயே இருபெருங் குரவரையு மிழந்து தன் அத்தையார் பங்கஜவல்லியம்மையால் வளர்க்கப்பட்டனன். இப் புண்ணியவதி பெற்றோரற்ற இவனையும் தனது ஏக புத்திரி ரமணியையும் தன்னிரு கண்மணிகளாகப் பாவித்து அத்தியந்த அன்போடு ஆதரித்துவந்தனள்.

ஜனார்த்தனனும் தன் அத்தையரின் அகம் பூரிக்க நற்குண நற்செய்கைகளிற் சிறந்து கல்வியில் அபிவிருத்தியடைந்து உயர்தரப் பரீக்ஷைகளில் தேறி, தனது இருபத்திரண்டாம் வயதில் ஓர் சிறந்த நியாயவாதியாயினன். ரமணிக்குச் சாவித்திரி என்ற உயிர்த் தோழி ஒருத்தி யிருந்தனள். அவ் விருவரும் ஒரே பாடசாலையில் கல்வி பயின்றவர்கள். ஒன்றாய்க் குலவி விளையாடிக் களித்தவர்கள். ஜனார்த்தனனிடத்திருந்து ஒன்றாய்ச் சங்கீதம் பயின்று ஆனந்தித்தவர்கள்.

ஜனார்த்தனனுக்கு ரமணியினிடத்துச் சகோதரவாஞ்சையும், அவள் தோழியினிடத்து மெய்க்காதலும் பூத்து நாளொடு முதிர்ந்து பழுத்திருந்

தன. சாவித்திரியும் ஜனார்த்தனனும் தம் தம் உளத்தெழுந்திருந்த காதலை ஒருவருக்கொருவர் வெளியிட்டு இருவரும் விவாகம் செய்து கொள்வதாகக்கூட நிச்சயித்திருந்தனர். இவ்வாறிருக்கையில், சாவித்திரியின் பெற்றோர்களாய சடகோபரும் ருக்மணியம்மையும் பணப்பேய் வசப்பட்டு அறிவழிந்து, தங்கள் செல்வச் சிறுமியை அறுபது வயதுக் கிழவனான விஜயரங்கதாசன் எனும் ஓர் மிராசுதாருக்குக் கன்னிகாபலி செய்விக்கத் தீர்மானித்து நிச்சிதார்த்த தினத்தையும் குறித்துவிட்டனர்.

சாவித்திரியின் நிச்சிதார்த்தப் பத்திரிகையை வாசிக்கக் கேட்டதினால் ஜனார்த்தனன் அடைந்த சோகத்தைக் கண்ணுற்ற ரமணி, அவனுக்குத் தன் தோழியின்மீதுள்ள மெய்க் காதலை நன்குணர்ந்தும், அதை அவன் வாய் வழியாகவே தந்திரமாக வெளியிடச்செய்து விஜயரங்கதாசருக்கு நிச்சயப்படுத்தியிருந்த மணத்தைத் தடுத்து, காதலரிருவர்க்கும் விவாகம் செய்விக்கத் தீர்மானித்தனள். இவ் வெண்ணத்தோடு போய்த் தன் தோழியைக் கண்டனள். கிழப்பிணத்திற்கு வாழ்க்கைப்படுவதை விட உயிர் துறத்தலே நலமெனத் துக்கசாகரத்தில் அழுந்திக்கிடந்த சாவித்திரியின் மனதைத் தேற்றினள். இருவர் மனத்தின் அந்தரங்கங்களையும் தான் அறிவதாகக் கூறி அவர்கள் எண்ணத்தையும் பூர்த்திசெய்வதாக உறுதிமொழி தந்தனள்.

இவ் வக்கிரம விவாகத்தைத் தடுப்பதற்கு வேண்டிய எற்பாடுகளை ஜனார்த்தனனோடு கலந்து மூவருமாய் ஆலோசிப்பதென இருவருமாய்த் தீர்மானித்தனர். மறுநாள் அர்த்தராத்திரியில் ரமணி, சாவித்திரியை அவனிடம் அந்தரங்கமாக அழைத்துப்போவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றனள். சடகோபரில்லத்திற்கு ரமணி நடுநிசியில் வரவிருந்த இரகசியத்தைத் தன் பணிப்பெண்ணால் உளவறிந்த வயோதிக மணமகனின் மகன் கண்ணையன் அப் பெண்மணிமீது வெகு காலமாக மோகமுற்றிருந்ததால், தன தெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள இதுவே சமயமெனத் தன் எவலர்களால் ரமணியைக் களவாடச்செய்து தன் தோட்ட மாளிகையில் சிறைப்படுத்தினன். ரமணி மாயமாய் மறைந்துபோனதை அறிந்த பங்கஜவல்லியம்மை, ஜனார்த்தனன், சாவித்திரி முதலியோர் அளவற்ற துயருற்றனர். அழுதனர். புரண்டனர். மர்மமறியாது மயங்கித் தியங்கினர்.

சிறைப்பட்ட ரமணியோ, வெகு தந்திரமாகத் தன்னை மீட்டுக்கொண்டு, சாஸ்வதிதாசர் என்ற நாமத்தோடு சந்நியாசிவேடம் பூண்டு, தான் எண்ணிய கரும முடித்தற்கு விடாது முயன்றனள்.

ரமணி சிறையினின்று மீண்டதும், சந்நியாசிவேடம் பூண்டதும், காணமற்போன பெண்மணியைக் கண்டுபிடித்தற்கு ஜனார்த்தனனையே துணைகொண்டதும், கண்ணையனையும் அவனுக்கு உடந்தையாயிருந்த பட்டாபிராமனையும் பெண்களவுக் குற்றத்திற்காகக் கடுங்காவல் தண்டனையடையச் செய்ததும், விஜயரங்கதாசரைப் பயமுறுத்தியும், சடகோபர் முதலியோர்க்கு நன்மதி கூறியும், கிழவனுக்கு ஆயத்தமாயிருந்த மண மணையில் ஜனார்த்தனனை யமர்த்தி அவனுக்கும் சாவித்திரிக்கும் விவாக முடித்துவைத்ததும், வெகு சுந்தரமாகவும் அலங்கிருதமாகவும் கற்பித்திருக்கின்றனர் கதாசிரியர். விரிக்கிற் பெருகும். ரமணியின் தந்திரோபாயங்கள் முற்றும் அற்புதமாகவே யிருக்கின்றன. கடைசியாக ரமணி தங்கட்குச் செய்த பேருபகாரத்திற்குக் கைம்மாருக, தாங்கள் சபதஞ்செய்துகொண்டதுபோல, ஜனார்த்தனனும் சாவித்திரியும் ஒருமனப்பட்டு முடிவு செய்தபடி, அடுத்த மாதத்தில் ரமணிக்கும் ஜனார்த்தனனுக்கும் விவாகம் நிறைவேறிற்று. பின்னர் ரமணி, சாவித்திரி, ஜனார்த்தனன் ஆகிய மூவரும் ஏக மனத்தினராய் அற்புதத் திருப்தியோடும் சுவர்க்க இன்பத்தோடும் வாழ்ந்தனர்.

குணகுண வாராய்ச்சி.

சொற்போக்கு.

இந் நாவல் யாவர்க்கும் இன்பம் பயக்கும் செவ்விய நடையில் எழுதப்பெற்றது. தமிழ் மொழியில் வல்லுநரல்லாதவரும் சிரமமொன்றின்றி உணர்ந்தறியுமாறு திராக்ஷாபாகமெனக் கூறும் எளிய நடையிலிருப்பதால், இது பெண்மக்கள் முதலிய அனைவரும் சுலபமாக வாசித்துக் களிக்கற்பாலது. தற்காலத்தில் சிலர் தமிழ்மொழியில் எழுதப் புகுந்து, வடசொற்களைப் பச்சை பச்சையாகவும் தாறுமாருகவும் கொட்டிக் கலந்து தென்மொழிச் செல்வியின் தமிழ் தழீஇய சாயலைக் குலைத்துக் கவினைக் கெடுத்து எழுதப்படும் நாவல்கள்போலிராது கூடியவரையில் சுத்தமான தமிழில் அமைந்துள்ளது. யாவரும் எளிதி லுணருமாறு தெள்ளிய தமிழ்நடையி லிருப்பினும், நாடோடியான இழிந்த மொழிகளைச் சேர்த்தல், வழூஉச் சொற்களைப் புணர்த்தல் முதலிய குற்றங்கள் இதிற் காணப்படவில்லை.

வாசகர்கட்கு எளிதிற் கருத்தை விளக்கிச் சொன்னயம் சிறக்கும் இத்தகைய தமிழ் நடையே, தற்கால நாவல்களுக்கு முற்றும் பொருத்தமுள்ளதென்று கூறுதல் மிகைபடக் கூறுதலாகாது.

பொருட்போக்கு.

இந் நாவல் வாசிப்பதற்கு இனிமையா யிருப்பதுடன் பல நீதிகளையும் உருவகப்படுத்திப் போதிக்கின்றது.

பெற்றோரற்ற குழந்தைகள்மீது இருத்தற்பாலதாய அன்பிற்கும் ஆதரவுக்கும் பங்கஜவல்லியம்மை இலக்கியமாகின்றனள். செய்நன்றிக்குக் கைம்மாறாக நடக்கும் நன்முறையை ஜனார்த்தனனிடம் கற்றறியலாம். நம் தேசாசாரங்களிலுள்ள சில தீமைகளில் ஒன்றாகிய கிழமாப்பிள்ளைகளுக்குக் குழந்தைகளைத் தாரைவார்க்கும் கொடுமை விஜயரங்கதாசர், சடகோபர் செய்கைகளினால் நன்கு விளங்குகின்றது. இளம்பெண்ணை இரைகொள்ள ஆவல்கொண்டலையும் அக் கிழப் பூதத்தை நாம் எத்துணையோ வெறுக்கின்றோமன்றோ! பணப்பேய் வசப்பட்டுப் பாழ்ங்கிணற்றில் தன் செல்வக் குழந்தையைத் தள்ளுதற்கு அஞ்சாத சடகோபன் போன்றவர்களை உலகத்தில் எவர்தான் இகழார்?

ரமணியின் செய்கைகளோ, தொடக்க முதல் முடிவு வரையில் பெரிதும் வியக்கத்தக்கவை. அவளுக்கு ஜனார்த்தனன், சாவித்திரியின் மீதுள்ள பேரன்பும், இவ்விரு காதலருக்கும் மணவினை முடிப்பதற்கு அவளெடுத்துக்கொள்ளும் விடாமுயற்சிகளும் முற்றும் புகழற்பாலனவே. ஆயினும் சந்நியாசி வேடம் பூண்ட அவளை இன்னாளென்று கடைசிவரையில் ஜனார்த்தனன் கண்டறியாததுமாத்திரம் உலக இயற்கைக்கு அவ்வளவு பொருத்தமாகக் காணப்படவில்லை. எவ்வேடம் தரிப்பினும் எக்கோலம் பூணினும், குழந்தைப்பருவத்தினின்று தன்னோடு கூடவளர்ந்தவள், பல பல முறையும் நீள நீளவும் தன்னோடு கலந்து பேசியும், குரலினாலும் பார்வையினாலும் கூட ஜனார்த்தனன் ரமணியைத் தெரிந்துகொள்ளாதிருந்தது வாசகருக்கு விபரீதமாகக் காணப்படினும் படும்.

சாவித்திரியோடு இரண்டாம் களத்திரமாக ரமணியையும் ஜனார்த்தனனுக்கு மணஞ்செய்துமுடித்தது இந் நாவலிலுள்ள முக்கிய குறையாகும்.

ரமணியின்மீது "மிக உருக்கமான சகோதரவாஞ்சை தன் மனதில் பதிந்திருக்கிறதென்றும்" சாவித்திரியின்மீது தனக்கு "ஏகஸ்திரீயின்பால் உதிக்கும் அதி உருக்கமான காதல் உண்டென்றும்" (71 பக்கம்) ஒப்புக்கொண்ட ஜனார்த்தனன் என்ற சற்புருஷன் மற்றவளையும் மணக்க எவ்வாறு துணிந்தனனோ? தன்மீது ஜனார்த்தனனுக்குள்ளது மெய்க்காதலன்று என்று அவன் வாய்மொழியினாலேயே அறிந்திருந்த

ரமணியென்னும் குணமணியும் அவனுக்கு இரண்டாங்களத்திரமாதற்கு எவ்வாறு மனம் ஒப்பினளோ? கதாநாயகி இயற்றிய பேருதவிக்குக் கைம்மாறாக ஜனார்த்தனன் அவளையும் மணந்துதான் தீரவேண்டுமோ? மணமக்களிருவரும் தங்கள் வாணாள் முழுவதும் ரமணியைத் தங்கள் உயிர்ச் சகோதரியாகப் பாவித்து நடத்தி நன்றியறிதலைக் காட்டியிருக்கலாமே. இவ்வாறு இருமனைவிகளை மணக்கப் புகும் ஜனார்த்தனனுக்கும், அவ்விரு மனைவிகளில் தானுமொருத்தியாக இருக்க இசையும் ரமணிக்கும், பரிசுத்தமான காதல்மீதும், ஏகஸ்திரீயின்பால் உதிக்கும் அற்புதக் காதல்மீதும் 7-வது அத்தியாயத்திலுள்ள இத்தனை பிரமாதவாதங்களென்னத்திற்கு? இவர்கள் கத்திக் கத்திக் கழுநீர்க்குடத்தில் விழும் பல்லியினங்களோ!

நம் தேசாசாரங்களில் உள்ள சீர்கேடுகளையும் தீமைகளையும் கதையுருவமாக ஒழுங்குபடுத்த முயலுதல், நாவல்களின் உட்கருத்தாதலின், பல பத்தினி அபாரதத்தைக் கண்டிப்பதும், ஏக பத்தினி விரதத்தைப் புகழ்ந்தேத்துவதுமன்றோ ஒவ்வொரு நாவலாசிரியர்களுடைய முக்கிய கடமை.

“மூவரும் ஏக மனத்தினராய் அற்புத திருப்தியோடும் சுவர்க்க இன்பத்தோடும் வாழ்ந்தனர்” என்று முடித்தற்கு மாறாக, இன்னும் இரண்டொரு அத்தியாய மெழுதி, சாவித்திரிக்கும் ரமணிக்கும் சில குழந்தைகளையும் கற்பித்து, பின் அவர்கள் வாழ்க்கையின் நடவடிக்கைகளைக் கண்ணுற்றாலன்றோ சககளத்தியரின் போராட்டம் குன்றுமேலிட்ட தீபம்போல விளங்கும்.

இரு சககளத்தியர் நடுவில் இருதலைக்கொள்ளி யெறும்புபோல அகப்பட்டு நிற்கும் ஜனார்த்தனனும் சுவர்க்க இன்பத்தோடோ அல்லது நரகத்துன்பத்தோடோ வாழ்ந்தானென்பதும் அப்போதுதான் வெளிச்சமாகும்.

உயிர்த்தோழிகளாகட்டும், உடன்பிறந்த சகோதரிகளாகட்டும், சககளத்தியர் போராட்டம் யாரைவிட்டது? மகா விட்டுணுவின் அவதாரமெனப்படும் தசரதராமர் தாயர்களைத்தான் அது விட்டதா?

ரமணி நாவலை யாக்கிய ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப்பிள்ளையவர்கள் ஐயைந்தாண்டுள இளவாசிரியர். அவர்க்கு உலகானுபவம் முதிர முதிர இத்தகைய குற்றங்களைக் களைந்து, தம்மையகத்துள்ள சொன்னயஞ் சுரக்கும் எழுதுகோலால் இன்னு மின்னும் பன்னலம்

பொழியும் உன்னத நாவல்கள் பல பல தீட்டி, நம் தமிழுலகிற்கு உதவ வேண்டுமென்பதே நமது ஆசைப் பெருக்கம். அவ்வாறே எல்லாம் வல்ல இறைவனும் அருளுக!

தம்பி – புருஷோத்தமன்.

தருணீமணி.

5. பலநாளைத் திருடன்.

(வெண்டாமரை ந, இதழ் கஉ, 267-ம் பக்கத் தொடர்ச்சி.)

சில நாட்கள் சென்றன. **சோமதத்தன்** மனம் அமாவாசையன்று சந்திரிகை போன்று களங்கமுற்றுப் பொலிவிழந்து நின்றது. தன்னறைக்குட் சென்று கதவைத் தாளிட்டு மனவமைதியை நாடினன்.

“சோமா! சோமா! **மாதரியி** னிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது” என்று சொல்லிப் **பத்மினி** பின்தொடர்ந்தனள்.

“அக்கா! அந்தத் தேவடியாளிடமிருந்தா?” என்றனன் **சோமதத்தன்** கோபத்துடன். தன் தன்மை எங்கு வெளியாகுமோ என்று பயந்து நடுங்கினான்.

பத்மினிக்கு இடி விழுந்ததுபோலாயிற்று. “ஆ! என்ன சொன்னான் சோமன்? நான் கேட்டது வாஸ்தவமா? தன் தம்பி ஒரு ஸ்திரீயைப்பற்றி யிங்ஙனம் பேசுவனா? அல்லது மாதரியும் ஓர் அற்ப வாராங்கனைதானோ? அப்படியாயின் மாதரிக்கும் சோமனுக்கும் என்ன சம்பந்தம்? மேலான குலத்துதித்து, பரோபகார சங்கம் முதலியவற்றிற்கு முக்கிய கார்யாதிகாரியாக விருந்து நற்கியாதிபெற்ற சோமதத்தனுக்கும் இக் கணிகை மாதுக்கும் உள்ள சம்பந்தம் யாதாயிருக்கலாம்? அப்படியாயின் சோமதத்தனைப்பற்றித் தான் கேள்வியுற்ற செய்திகள் யாவும் நிஜமா?” எனத் தனக்குள் தர்க்கிக்கலானாள். **சோமதத்தன்** நடுநடுங்கினான். தற்செயலாய்த் தான் எல்லாவற்றையும் மறைப்பதற்குப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கும்போழ்தே தவறித் தன் வாய் வீழ்ந்த சொற்களே தனக்குப் பிரதிகூல சாக்ஷியங்களா யமைந்ததைக் கண்டு திகிலுற்றான். ஆனால் பொய் நில்லாது. சத்திய வசனம் எப்போழ்தும்

உதடுகளின் நுனியில் "எப்போழ்து சமயம் வாய்க்கும், வெளியேறலாம்" என்று காத்துக்கொண்டிருக்கின்றது. சமயம் வந்தபோழ்து தன்னை யறியாமலே வெளிவந்துவிடுகின்றது.

பத்மினி முகத்தில் ஓர்விதக் கோபக்குறி பிறந்தது. சில நிமிட காலம் ககனத்துலவும் மேகக் கூட்டம் போன்றதோர் களங்கம் அவள் வதனத்தில் திகழ்ந்தது.

"என்ன அக்கா! கோபித்துக்கொள்ளாதே! ஏன் அவள் என்னை அடிக்கடி தொந்தரவு செய்கிறாள். என்ன! கடிதமா கொடுத்தனுப்பி யிருக்கிறாள்?" என்றான் சோமன். அவன் கரங்களில் ஓர்வித நடுக்கம் தோன்றியது. கண்கள் கலக்கமுற்றன. நாத் தழுதழுத்தது.

பத்மினி யாதொரு பதிலும் சொல்லாதவண்ணமே தன் சகோதரனின் முகத்தை உற்று நோக்கினள். "சோமா! வேண்டா! மாதரியின் சிநேகத்தை விட்டொழி. உன் நடத்தையைப்பற்றி அநேக சமாசாரங்கள் கேள்வியுற்றிருக்கிறேன். அவை எனக்குத் திருப்திகரமாயில்லை. அவை வேண்டா —" என்றனள். சோமதத்தன் அறையில் எலிகள் தொந்தரை மிகுதி. அவை கிறீச்சிட்டுச் சப்தித்தன. பத்மினியும் "சோமா! உன் அறையை எப்போழ்தும் சுத்தமாய் வைத்திருப்பதில்லை. சதா இந்த மாதிரி எலி தொந்தரவு செய்துகொண்டிருந்தால் எப்படித் தூக்கம் வரும்? என்னிடத்தில் காலகோடி என்ற விஷம் ஒன்று இருக்கிறது. சில சமயம் மனிதர்கள்கூட இறந்துபோய்விடுவார்கள் அதை யுட்கொண்டால் — அதை யனுப்புகிறேன் —" என்று சொல்லி வெளிவந்தனள் பத்மினி. சோமதத்தனும் கடிதத்தைப் பிரித்துப் பார்வையிடலாயினன்:

"சோமேசா!

நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து ஒரு வாரகாலம் ஆகியும் உங்களிடமிருந்து ஒரு கடிதமேனும் வரவில்லை. உங்களைப் பார்க்கவுங்கூட முடியவில்லை. இதற்கென்ன அர்த்தம்? நீங்கள் என்னைக் கைவிட்டீர்கள் என்று கொள்ளவா? நீங்கள் குறித்தனுப்பிய ஒரு வாரகாலமும் சென்றுவிட்டது. கட்டழகி சோரனது காதல் மிகவும் திடமானது என்பது சுப்பிரசித்தம். உங்களைவிட்டுப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொரு யுகம்போல் நீர்க்கமாய் இருக்கிறது. என்னாலினி யொரு கணமும் பொறுக்கமுடியாது. இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு உங்கள் தோட்டத்து வழியாக வருவேன். முன்போலவே என்னை வந்திருந்து

அழைத்துச் செல்லுக. இன்றேல் — என்ன நடக்குமோ என்னால் சொல்லமுடியாது. உங்கள் உருவத்தைச் சதா மனதில் தியானிக்கும்

மாதரி."

பத்மினியும் அதற்குள் தான் சொல்லிய பாஷாணத்துடன் உள் வந்தாள். "பாஷாணம் என் அறையிலில்லை. தருணியை வாங்கிவரச் சொன்னேன். நேரமாய்விட்டது —" என்றனள்.

சோமதத்தன் அதை வாங்கித் தன் பேழையுள் பத்திரப்படுத்தினன்.

. . . .

இரவு பன்னிரண்டுமணி நேரம்.

எங்கும் நிச்சப்தம். வெள்ளித்தட்டு ஆகாயத்திற் பதிப்பித்தது போல் சந்திரன் மிகவும் சுந்தரமாக அந்தரத்தே வந்து தோன்றினன். ஊரின் ஓர் புறத்திலிருந்த காட்டிலிருந்து நரிகள் ஊளையிடும் சப்தம் விசையாகக் காதில் வீழ்ந்தது. தடாகங்களில் தவளைகளின் சப்தமும், சிறுசிறு பூச்சிகளின் சப்தமும் சுழன்றெழுந்தன. ஓர்புறத்தில் இராக் காவலர்களின் கலவரம் மிகுத்தது. மற்றோர்புறத்தில் மணிபுரத்தைச் சுற்றி யோடிய அகழியின் சப்தம் பேரொலி செய்தது. தினகரனை முறியடித்து அநியாயமாய்க் ககனப் பிரதேசத்தைக் கைப்பற்றிய சந்திரனின் அராஜீக ஆக்ஷிக்குப் பயந்து சாதுக்கள் யாவரும் பறந்தோடினர் போலும். துஷ்ட ஜந்துக்களும் துன்மார்க்கருமே இராக்காலத்தில் தங்கள் உத்யோகத்தைக் கைப்பற்றியவர்கள்.

நிற்க, நாம் மேற்சொல்லிய நேரத்தில் இராஜவீதியைத் தாண்டிச் சித்திரவீதி வழியாக ஓர் மாதுமணி பாதசாரியாகச் செல்லவுற்றாள். சித்திரவீதியின் ஓர் கோடியில் வந்ததும் ஓர் சிறு பங்களாவின் முன் வந்து நின்றனள். வந்தவளுக்குச் சுமார் இருபது வயதிருக்கலாம். அவள் வதனத்து, மதனனைப் பழித்ததுபோல் ஓர் புன்சிரிப்புத் திகழ்ந்தது. அவள் "நம்போன்ற நாரீமணிகளிருக்க மதனனுக்கு இம் மகிதலத்து ஏது வேலை —" என்று தன் மனத்துள் நினைத்தாள்போலும். அவள் மிகவும் அழகு வாய்ந்தவளே. அவள் நடையிலும் உடையிலும் நாகரிகம் தானாகவே தோன்றியது. செல்வமுடையவள் போலவே தோன்றினாள். இருந்தாலும், அவளுடைய முக்தாஹாரம் அவள் கண்டத்திலில்லை. "இதோ! இதோ!" என்று கோட்சொல்லும் நூபுரமும் அவள் பாதத்திலணியவில்லை. கேசபாசமோ கார்முகிற் கூட்டம் போன்று அவள் சந்திர வதனத்தைச் சுற்றிப் பரவியிருந்தது. கேச சம்ஸ்காரங்கள் யாது

மின்றிக் காற்றிற் பறந்திருந்தது. மனோ வியாதியால் இளைத்திருந்த போதிலும், சுய சோபையை அது கெடுத்ததில்லை. கண்களிரண்டும் இராக் கண்விழிப்பினாலும், அழுகையினாலும் சிவந்து பருத்து, ஒடையிடை யமைந்த செந்தாமரை மலர்போல் விளங்கின. இவள் பங்களாவினருகே நின்றதும், ஓர் யுவன், 'மாதரீ!' என்று கூவிக்கொண்டே அச் சுந்தரியின்மீது மிக்கார்வத்துடன் பாய்ந்து அவளை யிறுகத் தழுவினன். அவன்தான் சோமதத்தன். நாம் சொல்லிய பங்களாவோ தருணீமணியின் "வசந்த வசதி." சோமதத்தன் தோட்டத்திலுள்ளது. இருவரும் வீட்டி னுட்புறஞ் சென்றனர்.

மணி காலை ஐந்தாகியது.

சோமதத்தனும் மாதரியும் தோட்டத்துப்புறஞ் சென்றனர். ஓர் காலடிச் சத்தம் அவர்கள் பின்னூற் கேட்டது.

"ஐயோ! மோசம் போனோம்!" என் றலறினாள் மாதரீ. அதே சமயத்தில் வெளுத்த முகத்துடன், "நான் அப்பொழுதே சந்தேகித்தேன்!" என்று சொல்லிக்கொண்டே பத்மினி யங்கே தோன்றினள். "ஏ! சோமா!" என்றனள். பத்மினியின் முகம் செந்தணல்போற் சிவந்தது.

(வரும்.)

R. வாசுதேவ சர்மா.

நமது நங்கையர்கள்.

(ஓர் புதிய கிளர்ச்சி.)

(வெண்டாமரை ௩, இதழ் ௧௨, 274-ம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழ்ப் பெண்களின் நிலைமையைத் திருத்துவதற்குரிய சாதனங்கள் பல. அவைகளை விரிவாக இவ் வியாசத்தில் எடுத்துக் கூற எண்ணியிருந்தேன்; ஆனால் அவ்வாறு புரிவதைவிடத் திருத்தத்துக்கு முதற் படியை மாத்திரம் வற்புறுத்திவிட்டு வியாசத்தை முடித்துவிடுவதே நலம் என மறு எண்ணத்தில் தோன்றிற்று. அந்த முதற்படி என்னவெனிலோ, தற்கால நிலைமையைச் சரியாக, உண்மையாக, உணர்ந்து கொள்வதுதான். மரக்கிளை யொன்றின் நுனிப்பாகத்தில் நின்று அடிப் பாகத்தைத் தறித்துக்கொண்டிருக்கும் பாக்யசாலி, தான் தரித்துள்ள அபாய நிலைமையை உணர்ந்தால்தானே தன்னைக் காப்பாற்றிக்கொள்ள

லாம். மற்றையவாறு அன்னோற்கு என்ன போதித்தும் என்ன பயன்! ஆகையால், மின்னலொளி கண்களிற் பாய்வதுபோல, தழலின் சூடு சரீரத்தைச் சுடுவதுபோல, பனிக்கட்டியின் குளிர்ச்சி ஜில்லென ஸ்பரிச உணர்ச்சியைத் தாக்குவதுபோல, நமது பெண்களின் தற்கால நிலைமை நமது மனத்தைத் தாக்க, எட்டிக்காய் கசப்பதுபோல அந் நிலைமையில் நாம் கசப்படையவேண்டும். இதுதான் அபிவிர்த்திக்கு அஸ்திவாரம். இதற்குத்தான் காலம் வந்துவிட்டது. இதைத்தான் புதிய கிளர்ச்சி என்கின்றேன். இந்தப் புதிய கிளர்ச்சி உதித்து நமது சமூக முழுவதும் மெல்ல மெல்லப் படர்ந்துகொண்டு வருகிறது. அதை மேன்மேலும் விரைவாகப் பரவச் செய்யவேண்டும். இந்தப் புதிய கிளர்ச்சியைப்பற்றிப் பேசப் பேச அதற்கு உயிரும் உறுதியும் வளர்கின்றன. ஆகையால் பத்திரிகைகளில் இதைச்சார்ந்த விஷயங்கள் எவ்வளவு அடிக்கடி பிரசுரமாகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு உத்தமம். அன்றியும் வெறும் பத்திரிகை ஆர்ப்பாட்டம் மாத்திரம் போதா. வீடுகளிலும், சங்கங்களிலும், உலாவப்போகு மிடங்களிலும், 'ரெயில்' முதலிய பிரயாண வாகனாதிகளிலும் சந்தர்ப்பம் நிகழ்ந்தபோதெல்லாம் இதைப்பற்றிய சம்பாஷணை பந்து மித்திரர்களுக்குள் நிகழவேண்டும். இவ்வாறு நமது நங்கையர்கள் நிலைமையைப்பற்றிய பேச்சு அதிகமாக வழங்க வழங்க அந்த நிலைமையின் இழிவும், அவ் விழிந்த நிலைமைக்குக் காரணமாயுள்ள பல ஆசாரங்கள் கொள்கைகளில் பொதிந்துள்ள ஊழல்களும் தெளிவு தெளிவாகத் தெரியும். தெரியத் தெரிய அவ் விழிந்த நிலைமையிலும் ஊழல்களிலும் வெறுப்பு உண்டாகும். பின்னர் அவைகளை இயற்கையாகவே தகர்த்தெறிந்துவிட்டு நாம் உன்னதமடைய வழிதேடுமாறுதான் நேரிடும்.

"பெண்பால், மானிட சமூகத்தில் முக்கிய பகுதியாயிருக்கும் பெண்பால், அஃதாவது சமூகம் நிகழ்கின்ற தன்மைக்குக் காரணமாயிருக்கும் பெண்பால் தமிழ் நாட்டில் வெறுஞ் சுயநலக் கடலில் ஆழ்ந்து சமூகத்தின் அவநம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் பாத்திரமாகி அபிவிர்த்தியை அடியோடொழிக்கக்கூடிய கொடுமையான ஆசாரங்களுக்கும் கொள்கைகளுக்கும் உட்பட்டிருக்கின்றாள். — உண்மையில் சரியான பெண் கல்வியே தமிழ் நாட்டிலில்லை. தற்காலம் படிப்பு என்றழைக்கப்படுகிற பத்துப் பன்னிரண்டு வயது அரைக்காலிலும் அரைக்காற் படிப்பு பெண்களுக்கு அற்ப குணமாகிய அகந்தையைத்தான் அளிக்கிறது. திமிர்ந்த கல்வியால் அமையப்பெறும் பெருந்தன்மையும் அறிவு விசாலமும் நமது பெண்களுக்கில்லை. — அன்றியும் தனியாக மத போதனை பெறாத தமிழ் நாட்டுப் பெண்களின் மத அறிவும் மத ஆர்வ

மும் கவனிப்பாரின்றி, தானே யமைந்து மிகக் கேவல நிலைமையையும் நாஸ்திகத் தன்மையையும் அடைந்துவிட்டது."

இதுதான் நமது நங்கையர்களின் நிலைமை. இந் நிலைமையைத்தான் கலைமகள் வெண்டாமரை 3, ஆகஸ்ட், செப்டம்பர், டிசம்பர் மாதத்துச் சஞ்சிகைகளில் சற்று விரிவாகக் கூறியிருக்கிறேன். (அவைகளை மீண்டும் ஒருமுறை நேயர்கள் இப்பொழுது எடுத்து வாசிப்பது நலம்.) சகோதரி சகோதரர்காள்! இந் நிலைமையைப்பற்றி ஆலோசித்துப் பாருங்கள். அது எவ்வளவு கேவலமாக இருக்கிறது எவ்வளவு பரிதாபகரமாக இருக்கிறதென்று உங்கள் நெஞ்சத்தில் தைக்கவில்லையா! ஆம், எல்லோருடைய நெஞ்சத்திலும் தைக்கத்தான் தைக்கிறதென்று நான் நம்புகிறேன். "இவ் வியாசத்திற் சொல்லப்பெறும் விஷயங்கள் எவர் அபிப்பிராயத்திற்கேனும் பொருந்தாதிருப்பின் அன்னோர் அவற்றை மறுத்துத் தங்கள் ஆக்ஷேப சமாதானங்களை வெளியிடுமாறு கோருகின்றேன்" என்று நான் குறிப்புரை விடுத்திருந்தும் இதுகாறும் யாதொரு ஆக்ஷேபனையும் எழாமலிருந்ததே நமது நங்கையர்களைச் சார்ந்த புதிய கிளர்ச்சி பொது ஜனங்களுக்குப் பிரியமானதாகவே யிருக்கிறதென்று எண்ணுகிறேன். ஆனால் நாம், "எல்லாம் உண்மைதான், உண்மைதான், உண்மைதான், ஆனல் நமக்கென்ன! நடக்கிறது நடக்கிறபடி நடக்கட்டும்" என்ற ஓர்வித மந்தமும் உபேக்ஷையுங் கொண்டிருக்கின்றோம். இந்த மந்தத்தையும் உபேக்ஷையையும் நாம் உதறிவிடவேண்டும்.

அன்னை கலைமகள் தமிழ் நாட்டுப் பெண்களை உயர்ந்த நிலைமைக்குக் கொணரத் திருவுளங் கொண்டுவிட்டாள். "அபிவிர்த்தி வேண்டும்" என்ற சிறந்த ஆசையாகிய அழகிய சுடர் உதித்துவிட்டது நமது நங்கையர்கள் நெஞ்சங்களில். அதை அணையாது வளர்க்க அன்னை கலைமகள் கருணைகூர்ந்திருக்கிருளென்று நான் நம்புகின்றேன். ஆகையால் அடியிற் கூறப்பட்டுள்ள சில பாட்டுகளி லடங்கியுள்ள நன்மதிகள் சாரதா தேவியின் திருவருள் விருப்பங்களென்று நான் நம்புகிறேன். பாட்டு எழுதுவதில் எனக்குப் பயிற்சி கிடையாது. என்றாலும், நமது நங்கையர்களின் நிலைமையை நினைத்து ஆத்திரத்தோடு கலைமகளைத் தியானித்த ஒரு சந்தர்ப்பத்தில் என்னையும் அறியாமல் என் இறகின் வழி பெருகின இப் பாட்டுகள். நேயர்கள் அவைகளை எவ்வாறு கருதினும் கருதுக:—

மங்களம்.

இப் பாட்டுகள் அடுத்த இதழில் வரும். ப-ர்.

தாதம்பேட்டைப்பழூர், சன்மார்க்க சபையின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா.

உள்ளூர் ஸ்ரீமான் சா. பொன்னுசாமி செட்டியாரவர்கள் சத்திரத்தின்கண், மேற்படி சபையின் 2-வது ஆண்டு நிறைவுவிழா திருநெல்வேலி ஸ்ரீமான் எஸ். பால்வண்ண முதலியாரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் இறைவனருளால் வெகு சிறப்பாக் நடைபெற்றது.

21-1-16 வெள்ளிக்கிழமை பகல் 1-30-க்குச் சபை கூடிற்று. தமிழ்வேத பாராயணஞ் செய்யப்பட்டது. சபா நாயகரவர்கட்கு உபசாரணைப் பத்திரம் வாசித்துக்கொடுத்தலும் அறிக்கைப் பத்திரம் வாசித்தலும் முடிந்தவுடன், சபா நாயகரவர்கள் 'சித்தாந்தம்' என்பதை நன்கு விளக்கி முன்னுரை கூறினர்கள். பின்னர், தூத்துக்குடி ஸ்ரீமான் போ. முத்தையபிள்ளை அவர்களால் "ஆலய தத்துவார்த்தம்" என்பதும், திருச்சி ஸ்ரீமான் ஒ. முத்தையபிள்ளை அவர்களால் "சிவலிங்க இயல்" என்பதும், அம்மலூர் ஸ்ரீமான் து. ப. அ. க. சதாசிவம்பிள்ளை அவர்களால் "சைவசமய குரவர்" என்பதும் இனிது பிரசங்கிக்கப் பெற்றன.

மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்குச் சபை கூடினதும் தமிழ்வேத பாராயணம் நடைபெற்றது. பின்னர், தஞ்சை ஸ்ரீமான் எஸ். வி. நாராயணசாமி செட்டியாரவர்கள் 'அன்பு' என்பதைப் பற்றியும், கும்பகோணம் பிரம்மஸ்ரீ வேங்கடராம ஐயரவர்கள் "துன்பந் துடைக்கும் துறை" என்பதைப்பற்றியும், திருவாரூர் ஸ்ரீமான் T. S. தியாகராஜ ஞானியாரவர்கள் "பருவத்தே பயிர்செய்" என்பதைப்பற்றியும், பூவாளூர் பிரம்மஸ்ரீ S. சோமசுந்தர ஐயரவர்கள் "சங்க நலன்" என்பதைப்பற்றியும், பாண்டியன் பத்திராதிபர் ஸ்ரீமான் சத்திவேற்பிள்ளை அவர்கள் "கம்பரும் சைவமும்" என்பதைப்பற்றியும், திருக்கோவலூர் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் 'மனுச்சோழன்' என்பதைப்பற்றியும், கும்பகோணம் ஸ்ரீமான் சபாபதிப்பிள்ளை அவர்கள் 'தர்மம்' என்பதைப்பற்றியும், ஜெயங்கொண்டம் ஐக்ய சங்கங்களின் இன்ஸ்பெக்டரவர்கள் "சங்க நலன்" என்பதைப்பற்றியும், கும்பகோணம் ஸ்ரீமான் சோ. குமாரசாமி செட்டியாரவர்கள் "தமிழின் பெருமை" என்பதைப்பற்றியும், தூத்துக்குடி ஸ்ரீமான் போ. முத்தையபிள்ளை அவர்கள் "சிதம்பர தத்துவார்த்தம்" என்பதைப்பற்றியும் நன்கு உபந்யசித்தார்கள்.

பிறகு சபா நாயகரவர்களால் சுவையார்ந்த முடிவுரை கூறப் பெற்றதின்மேல் எல்லோருக்கும் உபசாரம் செய்யப்பட்டு வாழ்த்துக்கள் கூற, குதூகலத்துடன் உற்சவம் இனிது நிறைவேறியது.

போ. மாணிக்கம்,
காரியதரிசி.

'முத்தரசர்'.

செந்தமிழ் தொகுதி எ, பகுதி க, ஜீலை ௲ கார்த்திகை மீ
பத்திராசிரியர் கூற்று.

நாலடியாரில் "பெருமுத்தரையர் பெரிதுவந்தீயுங் கருனைச்சோ றார்வர் கயவர்" எனவும், "நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரையரே செல்வரைச் சென்றிரவாதார்" எனவும், வருவனவற்றால் முத்தரையர் என்ற வகுப்பார் தமிழ்நாட்டிற் கொடையும் செல்வமும் கொண்டு விளங் குவாரென்பது தெரியும் எனவும் பிறவும் கூறுவர்.

நாலடியாரில் முத்தரையர் என்றிருப்பதை யோராமே முத்தரச ரென்று தலைப்புரைத்தனர். காரணமும் கூறிற்றிலர். புணர்ச்சியின்மை செய்துங் காட்டிலர்.

அரசர் — அரையர் என்றாகும் போலி யொன்றையே கருதி, முத்தரைய ரென்பதை முத்தரசரெனக் கூறினர்போலும்.

நாலடியார், தாளாண்மை.

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றார்வர் கயவர் — கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்."

மானம்.

"மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாம்
செல்வ ரெனினுங் கொடாதவர் — நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்."

முத்தரையர் என்பதற்குக் காரணமும் பிறவும் கூறுதும். முத் தலை — சூலம். முத்தலையர் முத்தரையரென் றாயிற்று. இது ஈலயோர

பேதமாகும். ரகாரத்துக்கும் லகாரத்துக்கும் வேறுபாடில்லை யென்பது, போலியென்பர், குலத்தாற் சுத்திப் பொருந்தவல்லாரென்பது பொருள். இம் முத்தரையர் பாளையகார வகுப்பைச் சேர்ந்தவர்கள். பாளையகாரராவார், அரசர்க்குக் கீழ்ச் சில சேனையோடும் ஒவ்வோர்புறங்கட்கு அதிகாரியாக இருப்போரும், கூடாரத்தி லிருப்போரும், படைத்தலைவரும் ஆவர். இவரே ஊர் காவலர். ஊர் காவலரெனினும் தலையாரியெனினும் ஒக்கும். இவர்கட்கு முத்திரியரென்னும் பெயரும் உண்டு. முத்தலையாரென்பது தலையாரியெனவும் முத்தரையரென்பது முத்திரியரெனவும் திரிந்தன. இவர்கள் ஊக்கமும் வஞ்சமும் ஒருப்பாடும் உள்ளவர்களாயும் வாய்ப்புழிக் கொலைசெய்தற்கும் அஞ்சாராயு மிருந்தனர். இவர்கள் சூழ்ச்சியைத் தேவர்களும் அறிகிலார். இவ் வகுப்பாருள் பொருதுவென்று ஊர்ப் பரிசு முதலியன பெற்றூர் செல்வராயினர்.

இவர்கட்குக் கோட்டை முதலியன வுள்ளன. இவர்களை யொருவரும் எதிர்க்கலாகாது. எதிர்த்தால் அவர் தலை போய்விட்டது. பழைய பாளையப்பட்டைச் சார்ந்த கிணறுகளைச் சோதிக்கின் அவற்றுள் மனிதருடைய மண்டை முதலியனவே கிடைக்கும். பிறவும் உணர்க. "வீரன் தேண்மை கூரம்பாகும்."

திருமாகறல், கார்த்திகேய முதலியார்.

இலக்கணப் பகுதி.

தொல்காப்பியம்.

தமிழ்மொழி உலகத்தில் பன்னீராயிரம் யாண்டுகட்கு முன்னரே சீரும் சிறப்பும் வாய்ந்த இனிய மொழியாகும். தமிழ் எழுத்துக்களுடைய தோற்றம் காலங்கள்தோறும் மாறுபட்டுப் பல வேறுபாடுகளை யடைந்துள்ளதென்பது பழைய சிலாசாசனங்களால் நன்கு விளங்குகின்றது. அத் தமிழெழுத்துக்களின் பழைய உருவத்தினின்றும் திரிந்தே பல மொழிகளுக்கு எழுத்துக்கள் உண்டாயின. அவற்றை எடுத்துக்காட்டுதலை விரிவஞ்சிவிடுத்தனம். பழமையானதும் தனிமையானதும் இனிமையானதும் மிகப் பழையகாலத்திலேயே சிறப்படைந்திருந்ததுமான தமிழ்மொழி பல்கோடி மக்களால் பேசப்படுவதேயாகும்.

வடுகு, கன்னடம், மாராட்டிரம், குர்ச்சரம், துளுவம், சிங்களம் முதலிய பல மொழிகளும் இதனினின்றே ஒவ்வொருகாலத்தில் திரிபடைந்த மொழிகளாமென்பது, உள்ளங்கை நெல்லிக்கனிபோல், சொல்லாராய்ச்சி செய்கின்றவர்கட்கு விளங்கும். மலையாளம், பன்னிரு தமிழ்ப் பிரிவினுள் குடத் தமிழும் குட்டத் தமிழுமாகையால், அதனை வேறு மொழியாகப் பிரித்தல் கூடாமையாகும். எழுநூறு யாண்டுகட்கு முன்னர், எழுதச்சன் என்பவனால், ஆரியங்கலந்த எழுத்துக்கள் படைக்கப்பட்டமை, மலையாளிகட்கு நன்றாகத் தெரியும். மேலும் அந்நாட்டுக் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துக்களே பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவையல்லாமலும் சீனம், பர்மா, மலேயா முதலிய மொழிகளுள்ளும் தமிழ்ச்சொற் கலப்புப் பலவாற்றானும் பார்க்கலாமென்க. கன்னியாகுமரிக்குத் தெற்கே பல்லாயிர காவதப்பூமி கடல்கொண்டொழிந்தமையாலும் தமிழ்மொழி பேசுமாக்கள் முற்காலத்தில் எண்ணற்றவர்களா யிருந்தனரென்பது தெற்றெனத் தெரிகின்றது. இப்போதும் தமிழ் மக்களின் தொகை மிகுதியேயாம்.

எத்துணையோ பெருந் தொகையுள்ள மக்களால் பேசப்படும் தமிழ்மொழி, ஆயிரம் யாண்டுகளாகப் பன்மொழிமன்னர் படையெழுச்சியினாலும், பல வேற்றுமதக் கோட்பாடுகளாலும் தன் பெருமை குலைந்து பல வேறுபாடுகள் கலக்கப்பெற்றன. தமிழர்களது குலப்பிரிவு, வழக்க ஒழுக்கங்கள், மணம், இசை, கூத்து, மருத்துவம், காலகணிதம், ஓவியம், அறநெறி முதலிய யாவுமே மாறி வேறாயின. மேற் சொல்லியவைகளையெல்லாம் விரித்துக் கூறுவனவாகிய அகத்தியம், மாபுராணம், பூதபுராணம், பன்னிரு படலம், அவிநயம், காக்கைபாடினியம் முதலிய பல நூல்களும் இறந்து, ஆரியர்க்கு இருக்குவேதமே போன்று, தற்காலத்து அழியாது நிலைத்து நிற்கின்ற நூல் தொல்காப்பியம் ஒன்றேயாம். அது தலைச்சங்கத்தார் காலத்துத் தோன்றி, இடைச்சங்கத்தும் கடைச்சங்கத்தும் ஆராய்ச்சிசெய்த நூலாக நின்று, இன்னும் அழியாது உள்ள முத்தமிழுள்ளும் இயற்றமிழைச் சிறப்பித்து விளக்குவதாம் என்க. பன்னிரு படலத்து – பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர் நல்லிசை நிறுத்த தொல்காப்பியன் என்று கூறியிருப்பதனாலும் அத்தொல்காப்பியர் பெருமை இற்றெனத் தெற்றென விளங்கும்.

தொல்காப்பியம் தமிழர்கட்கு மிக்க பயனுடைய நூலாகும். அதன்மாட்டுக் கூறிய அருமைப் பொருள்களை ஆராயுமிடத்து, உலகத்துள்ள பல தேயத்து நூல்கள் ஒருவாற்றானும் ஈடாகாவென்க. அஃது மக்களுக்கு அகத்தின்கண்ணே நிகழும் ஐந்திணை யொழுக்கத்தினைக்

கூறும் அகப்பொருளையும், மக்கட்குப் புறத்தே தோன்றும் எல்லாப் பொருள்களையும் கூறும் புறப்பொருளையும் தனக்கு இலக்கணமாகக் கொண்டு அறம், பொருள், இன்பங்களைச் செவ்வைபடச் சொல்லும் அரிய பெரிய நூலாகும். அந்நூல் ஒன்றே தமிழர்கட்கு முதனூலாகிய அகத்தியத்திற்குப் பின்னர் விளங்கி, அகத்தியமே போன்று பயன்படும் இனிய நூல் என்க.

இத் தொல்காப்பியம் கடைச்சங்கத்தார் காலத்தே மிகப் பெருமையுற்றிருந்தது. ஆதலை யாராய்ந்து கற்கவேண்டுவோர், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பரிபாடல், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய நூல்களை முன்னர்ப் படித்தல் வேண்டும். தொல்காப்பியம் முறையே கற்றவர்கட்கன்றி மற்றையோர்க்கு, தமிழர் ஒழுக்க வழக்கங்கள் முதலியன நன்கு விளங்கா. அஃது அரிய அறிவையும் ஞானத்தையும் அழுந்தப் பயிற்றும் அருமைவாய்ந்தது. அதனை, “அது தானும் ஞானத்திடையதாகலின் அதனை யாமே தீர்க்கற்பாலம் என்று அறுபது சூத்திரத்தை யெழுதிப் பீடத்தின் கீழிட்டான்” என இறையனாரைச் சுட்டி, இறையனார் அகப்பொருட் பாயிரத்தின்கண் எழுதப்பட்டிருக்கின்றதனால் அறியலாம். இத் தொல்காப்பியத்திற்கு, கடைச்சங்கத்துப் புலவருள் ஒருவராகிய கல்லாடர் விருத்தியுரை யெழுதியிருக்கின்றார். அது ஆரியத்திற்கு மாறாகலின் அதனைக் கெடுத்துச் சிற்சில பாகங்களை ஒழித்துவிட்டனர். இளம்பூரணர்உரை மூன்றதிகாரத்துக்கும் உண்டு. நச்சினார்க்கினியம் மிகச் சிறந்த உரையாம். பேராசிரியர் உரை முழுமையும் இன்றாம். பெயர்தெரியார் உரை யொன்று பாந்து எழுத்ததிகாரம், சொல்லதிகாரங்கட்கு உண்டு. சேனாவரையர் உரை நச்சினார்க்கினியர் உரைக்குப் பிற்பட்டது. மேற்சொல்லிய ஏழுரைகளுங் கண்டார் தொல்காப்பியம் நன்றாக அறிந்தவராவர்.

தொல்காப்பியம் அச்சுப்பிரதி இப்போது கிடைப்பது அருமையாகியது. இருபத்தைந்து யாண்டுகட்கு முன்னர், யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களால் அச்சிடப்பட்டதைத் தவிர, பின்னர் வேறொருவராலும் அச்சிடப்படவில்லை. அந்தோ! கொடுமை! கொடுமை!! தமிழர் வேதமாய தொல்காப்பியம் வாசிப்பவர் குறைந்தமையே தமிழ்நாடு சீர்குலைந்ததற்குக் காரணமென்க. பல்கோடிக் கணக்கான மக்கள் பொருந்திய தமிழ்நாட்டில் ௨௫-யாண்டுகளாக ஆயிரம் புத்தகங்கூடத் தொல்காப்பியம் படிக்கவில்லையென்றால், நம்மவரைப் பற்றி நாம் என்சொல்வது! தமிழர் வழக்கங்களை வேள்வி முதலியன

கூறும் ஆரிய நூல்களால் எப்படி யறியமுடியும்? நம் தமிழர்கட்கே தமிழ் நூற்களில் இப்போது அபிமானமில்லை. அலவைப் பெண்டிர் தலைவனை வேண்டாது அன்னியன்மாட்டன்புறுமாறு வேற்றுமொழி விருப்புற்று அப் பெண்டிர் அவனை ஈர்த்துச் செல்லுமாறு தாமும் வேற்று மொழியைப் பேசுவாராயினர். இது உண்மையாக, தொண்டை மண்டலத்து வடபாகங்களாகிய சித்தூர், திருத்தணியல், திருவெவ்வ ளூர், பொன்னேரி என்கிற ஊர்களுக்கு வடபாகங்களில், தமிழர்களே தெலுங்கராகி யிருக்கின்றதைக் காணலாம். . செந்தமிழ்ச் செல்வர்காள்! இதுகாறும் யான் கூறியது பித்தன் பிதற்றிய வுரையேபோல் தோற்றி னும் தோற்றுக. இன்னும் வெளிவரவேண்டிய தமிழ் நூல்கள் பல வுள்ளன. அவையெல்லாம் வெளிப்படுத்தற்கில்லையே யென்ற வருத்தத் தாலும், தொல்காப்பியம் ஒரு பிரதிகூட அச்சியற்றினது கிடைக்காது வருந்தும் பல்லோர்களது வாய்மொழியாலும் இப் புதுவைக் கலைமக ளிடத்து யான் முறையிடவேண்டியேனென்.

திரு. சுப்பிரமணிய தேசிகர்,

சிலாசாசன பரிசோதகர், காஞ்சீபுரம்.

சாத்திரப் பகுதி.

முக்திகோபநிஷத்.

2-வது அத்தியாயம்.

(அநுமான் முதலாவது அத்தியாயத்தின் அமிசங்களைச் சங்கிரக மாகக் கேட்ட பிறகு, முக்தி யிலக்கணங்களை விரிவாகக் கேட்கும் பொருட்டு, மறுபடியும் பிரசினை செய்கின்றார்.)

௧. பிறகு ஆஞ்சனேயர் அந்த இராமசந்திரனை நோக்கி, ஜீவன் முக்தியென்பது எது? விதேக முக்தியென்பது எது? அந்த அர்த்தத்தில் பிரமாணம் எது? அம் முக்திகள் எப்படிச் சித்திக்கும்? சித்தியால் உண் டாகும் பிரயோஜனமென்ன? என்று கேட்டனர்.

ஜீவன் முக்தி விதேக முக்தி யிலக்கணங்களையும் அவற்றிற்குப் பிரமாணங்களையும், அவை சித்திக்கும் விதத்தையும், அவற்றின் பயனை யும் குறித்து அநுமான் இராமரைக் கேட்டனரென்க.

(ஸ்ரீ ராமர் கூறுகின்றார்.)

உ. ஜீவனுக்கு, கர்த்திருத்துவம், போக்திருத்துவம், சுகம், துக்கம் முதலியவைகளே யிலக்கணமாகவுடைய மனோ தர்மமே துன்ப மாதலினாலே பந்தமாகின்றது; அப் பந்த நிவர்த்தியே ஜீவன் முக்தி யாகும்.

கர்த்திருத்துவ போக்திருத்துவ சுக துக்காதிகளே யிலக்கண மாகவுடைய சித்த விருத்தியே ஜீவனுக்குப் பந்தமென்றும், அப் பந்த நிவர்த்தியே ஜீவன் முக்தியென்றும் கூறினாரென்க.

கர்த்திருத்துவமாவது – நான் எல்லாக் கர்மங்களையும் செய்து கொண்டிருப்பவனென்னும் அபிமானம், போக்திருத்துவமாவது – கர்ம பலத்தை யனுபவித்துக்கொண் டிருப்பவனென்னும் அபிமானம். ஜீவன் முக்தியாவது – உலகினர்க்குச் சம்சாரியாகக் காணப்பட்டுக்கொண்டு தான் சம்சாரியாகாமல் பிரம்ம சொரூபமாக இருக்கும் நிலை.

ங. உபாதியினால் விடப்பட்ட கடாகாயம்போல் (கடபாவம் நசியா நிற்க அதிலுள்ள ஆகாயம் மகாகாசமானாற்போல) பிராரப்தம் நசித்தலி னாலே (உபாதியான அவித்தை யில்லையாதலின்) தேக சூனியமான (விதேக) முக்தியுண்டாகும். ஜீவன் முக்தி விதேக முக்திகளுக்குப் பிரமாணம் நூற்றெட்டு உபநிஷத்துக்களாகும். கர்த்திருத்துவ முதலா கிய துக்கங்களின் நாசன மூலமாக, சொரூப பூத நித்தியானந்தமடைதலே பிரயோஜனமாகும். துக்க நிவிர்த்தியுண்டாகி ஆநந்த ரூபமடைதலே பிரயோஜனமாகவுள்ள அப் பிரம்ம விசாரம் (மோக்ஷம்) புருஷனுடைய பிரயத்தனத்தாலே சாத்தியமானதாகின்றது. (புருஷப் பிரயத்தனத் தாலே மோக்ஷ முண்டாகுமென்றபடி.)

கடபாவம் நசித்தவுடனே அதிலுள்ள ஆகாசம் மகாகாசமாவது போல அஞ்ஞான உபாதி பிராரப்தக்ஷயமானவுடனே அதிலுள்ள சைதன் னியம் பிரம்ம சொரூபமாகும். இதுவே விதேக முக்தியென்றும், இந்த ஜீவன் முக்தி விதேக முக்திகளுக்கு நூற்றெட்டு உபநிஷத்துக்கள் பிர மாணமென்றும், கர்த்திருத்துவாதி துக்கங்கள் நசித்துச் சொரூப பூத நித்தியாநந்த மடைதலே முக்கிய பிரயோஜனமென்றும், இதற்குப் புருஷப் பிரயத்தனம் முக்கிய சாதனமென்றும், அந்தப் பிரயத்தனத் தாலே முக்தி சித்திக்குமென்றும் கூறினாரென்க.

ச. புத்ரகாமேஷ்டி யென்னும் காமிய கர்மத்தினாலே புத்திர னையும், வர்த்தக முதலிய இலௌகிக வியாபாரத்தினாலே பொருளையும், யாகத்தினாலே சுவர்க்கத்தையும் எப்படி அடையலாமோ அப்படியே

புருஷ பிரயத்னத்தாலே சாத்தியமான வேதாந்த சிரவண மனன நிதித்தியாசங்களினலே யுண்டான சமாதியினல் ஜீவன் முக்தி விதேக முக்தி யிலாபம் உண்டாகின்றது

மனிதர்கள் புத்ர காமேஷ்டிசெய்து புத்திரர்களேயும், வர்த்தக முதலியவற்றைச்செய்து திரவியத்தையும், யாக முதலியவற்றைச்செய்து சுவர்க்கத்தையும் அடைவதுபோல, புருஷ பிரயத்தன சாத்தியமான வேதாந்த சிரவணதிகளால் உதித்த ஐக்கிய சாக்ஷாத்கார ரூப சமாதியினல், ஜீவன் முக்தி விதேக முக்திகளே யடைவார்கள் என்று கூறினரென்க.

சத்வ சேஷமுள்ளது ஜீவன் முக்தி. சத்வ சேஷமில்லாதது விதேக முக்தி. சத்வமாவது பிரம்மாகார சித்தவிருத்தி.

௫. சர்வ வாசனைகளின் நாசத்தினலே அம் முக்திகள் லபிக்கின்றன.

தேக வாசனை, சாஸ்திர வாசனை, லோக வாசனை இவற்றின் நாசத்தினலே ஜீவன் முக்தி விதேக முக்திகள் உண்டாகுமென்றுரென்க.

(இந்த அர்த்தத்தில் சுலோகங்கள் உதகரிக்கப்படும்.)

௬. புருஷப் பிரயத்தனம், சாஸ்திர மரியாதையைக் கடந்துள்ளதென்றும், சாஸ்திரீயமானதென்றும் இரண்டுவிதமாக ஸ்மரிக்கப்பட்டுள்ளது. அவ் விரண்டினுள் சாஸ்திர உல்லங்கனம் செய்து நடத்தல் நரகபாதத்தின் பொருட்டும், சாஸ்திரீயமானது முக்தியின் பொருட்டும் சொல்லப்பட்டன.

புருஷ பிரயத்தனம், அசாஸ்திரீயம் சாஸ்திரீயமென இரண்டு விதமாக விருக்கும்; சாஸ்திரங்களின் கட்டுப்பாட்டை விட்டு நடந்தால் நரகமும், சாஸ்திராசாரப்படி நடந்தால் மோக்ஷமும் கிடைக்குமென்பது கருத்து.

௭. உலக வாசனையோடும் சாஸ்திர வாசனையோடும்தேகவாசனையோடும் கூடியுள்ள ஜந்துக்களேப்போல, திருஷ்டமான போகங்களிலேயே யபிமானமுள்ள ஜீவனுக்கு, பிரம்ம ஞானமானது இருப்பது இருப்பதுபோலவே பிறக்காது.

வாசனுத்திரயத்தோடு கூடியுள்ளவனுக்கு இந்தப் பிரம்ம ஞானம் சிறிதும் உதயமாகாதென்பது கருத்து.

மேல் ௫-௭-வது சுலோகத்தில் வாசனையென்பது விளக்கப்படுகிறது.

(வரும்.)

ஓர் ஆரியன்.